**CCE RR**
**UNREVISED FULL SYLLABUS**

**A**

ಕರ್ನಾಟಕ ಶಾಲಾ ಪರೀಕ್ಷೆ ಮತ್ತು ಮೌಲ್ಯನಿರ್ಣಯ ಮಂಡಲಿ, ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003

**KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD, MALLESHWARAM, BENGALURU – 560 003**

ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಪರೀಕ್ಷೆ, ಜೂನ್ — 2023

**S.S.L.C. EXAMINATION, JUNE — 2023**

ಮಾದರಿ ಉತ್ತರಗಳು

**MODEL ANSWERS**

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**

**CODE NO. : 10-T**

ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

**Subject : First Language — TAMIL**

( ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Repeater )

ದಿನಾಂಕ : 12. 06. 2023 ] [ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100

Date : 12. 06. 2023 ] [ **Max. Marks : 100**

**I.** கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுதல் : **6 × 1 = 6**

1. செய்யுளுக்கே உரியதாய் நிற்கும்

   (A) பெயர்ச் சொல்

   (B) வினைச் சொல்

   (C) இடைச் சொல்

   (D) உரிச் சொல்

*Ans.* :

(D) உரிச் சொல்

2. சொற்கள் பல அடுக்கி வரும்

   (A) இரட்டைக் கிளவி

   (B) இரட்டுற மொழிதல்

   (C) அடுக்குத் தொடர்

   (D) அளபெடை

*Ans.* :

(C) அடுக்குத் தொடர்

3. ஐந்து சீர்களைக் கொண்டது

(A) குறளடி

(B) சிந்தடி

(C) அளவடி

(D) நெடிலடி

*Ans.* :

(D) நெடிலடி

4. செப்பலோசை உடையது

(A) வெண்பா

(B) ஆசிரியப்பா

(C) கலிப்பா

(D) வஞ்சிப்பா

*Ans.* :

(A) வெண்பா

5. பொதுப் பொருளே சிறப்புப் பொருளாகும்

(A) வேற்றுமையணி

(B) வேற்றுப் பொருள் வைப்பணி

(C) பிறிது மொழிதல் அணி

(D) பின்வரு நிலையணி

*Ans.* :

(B) வேற்றுப் பொருள் வைப்பணி

6. பகைவரின் மதிலை முற்றுகையிடுதல்

(A) வெட்சி

(B) வஞ்சி

(C) காஞ்சி

(D) உழிஞை

*Ans.* :

(D) உழிஞை

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை நிரப்புதல்** **4 × 1 = 4**

7. தமக்கென வாழ்வோர் - கடுகு உள்ளம்;
பிறர்க்கென வாழ்வோர் : .......................... .

*Ans.* :

பெரிய உள்ளம்

8. ஆதிக்கவி பம்பன்;
மகாகவி : .......................... .

*Ans.* :

பாரதியார்

9. 'கொடுக்க கொடுக்க' - செல்வம் பெருகும்;
படிக்க படிக்க : .......................... .

*Ans.* :

அறிவு பெருகும்

10. தாயிற் சிறந்த - கோவிலுமில்லை;
தந்தை சொல்மிக்க : .......................... .

*Ans.* :

மந்திரமில்லை

**III. ஒரு தொடரில் விடை தருதல் :** **7 × 1 = 7**

11. இறைவன் ஆனந்த மாகடலாவது எப்போது ?

*Ans.* :

பாசக்கட்டினை ஒழிக்கும் போது. 1

12. எவ்வெவற்றை நீக்கி வாழ்வது அறமாகும் ?

*Ans.* :

பொறாமை, பேராசை, கடுஞ்சொல், கடுங்கோபம். 1

13. தலைவி என்ன சமைத்தாள் ?

*Ans.* :

புளி குழம்பு. 1

14. ஓசோனின் எமன் எனப்படுவது யாது ?

*Ans.* :

சி.எப்.சி. குளோரோ ப்ளோரா கார்பன். 1

15. மலேசியாவின் தலைநகரம் எது ?

*Ans.* :

கோலாலம்பூர் 1

16. பம்பன் இயற்றிய இருநூல்கள் யாவை ?

*Ans.* :

i) ஆதிபுராணம்

ii) விக்கிரமார்ச்சுன விஜயம். 1

17. தினம் தினம் ''என்னுடைய நாடே'' என்று பாடப்படும் 'நாடு' எது ?

*Ans.* :

இந்திய நாடு. 1

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருதல் 10 × 2 = 20**

18. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்பு நலன்கள் யாவை ?

*Ans.* :

i) இல்லாதோர்க்கு ஈதல் நிலையாமையை உணர்தல் 1

ii) எந்த உயிரையும் வதைத்தல் கூடாது. 1

19. பிரமன் இராவணனுக்குக் கொடுத்த சாபம் யாது?

*Ans.* :

i) உன்னை விரும்பாத பெண்ணை நீ வலிய தொடும் போது, 1

ii) உன் பத்து தலைகளும் சுக்கு நூறாய் வெடித்துச் சிதறி இறப்பாய். 1

20. பெண்கள் எதை வெட்டிவிட்டோமென்று கும்மியடித்தனர் ?

*Ans.* :

i) மாட்டையடித்து வசக்கித் தொழுவில் மாட்டும் வழக்கத்தைக் 1

ii) கொண்டு வந்தே வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார். 1

21. பொருந்தா இயல்புடைய இரண்டு உயிர்கள் யாவை ?

*Ans.* :

i) வாலை ஒட்ட நறுக்கினாசம் நன்றியுடன் நாய் வாலாட்டும். 1

ii) பால் வார்த்தாலும் விஷம் குறைக்காது பாம்பு. 1

22. திரு.வி.க.-வை 'வானம்பாடி' என அழைப்பதற்கான நோக்கம் யாது ?

*Ans.* :

i) வெள்ளாடை சூழ்ந்த மெல்லிய உடலும், 1

ii) புலமைப் பொலிவுற்ற அழகிய முகமும், அருள் பெருகும் கரிய விழியும் பெற்ற வானம்பாடி திரு.வி.க. 1

23. கடுகு உள்ளம் கொண்டோரின் குணங்கள் என பாரதிதாசன் கூறுவன யாவை ?

*Ans.* :

i) தான் உண்டு தன் வேலை உண்டு என எப்போதும் இருப்போர் மற்றவர்களைப் பற்றி மருந்துக் கூடச் சிந்திக்காமல், 1

ii) தம் குடும்பத்தாருக்காகவே இருபத்து நான்கு மணி நேரமும் தன்னல உணர்வுடன் வாழ்ந்து வருவோர். 1

24. சி.எப்.சி ( C.F.C ) என்றால் என்ன ?

*Ans.* :

i) சி.எப்.சி என்பது குளோரோ ஃப்ளாரோ கார்பன் ஆகும். இது குளிர்ச்சியை ஏற்படுத்த பயன்படும் இரசாயன பொருள். 1

ii) இதன் ஒரு மாலிக்யூல் ஓசோனில் ஒரு இலட்ச மாலிக்யூலை அழிக்கக்கூடியது. 1

25. சிந்தனைக்கு விருந்தாக அமையும் விடுகதை ஒன்றினை விளக்கி வரைக.

*Ans.* :

i) அறிவின் மறுபெயர் 1

ii) இரவில் வருவது - அது என்ன ?
(மதி) 1

26. தாய், தந்தை மற்றும் அரசன் செய்ய வேண்டிய கடமைகளாக பொன்முடியார் கூறுவன யாவை ?

*Ans.* :

i) தாயின் கடமை : ஈன்று புறம் தருதல்.
தந்தையின் கடமை : சான்றோனாக்குதல் 1

ii) வேந்தன் கடமை :
நன்னடை, நல்கல், நல்லாட்சி புரிதல் 1

27. இறந்தகாலம் குறித்து வைரமுத்து கூறுவன யாவை ?

*Ans.* :

i) திருக்குறள் : இறந்தகாலத்தில் இயற்றிய திருக்குறள் இன்னும் நம் மத்தியில் வள்ளுவரை வாழ்வித்து கொண்டு இருக்கிறது. 1

ii) தாஜ்மஹால் : இறந்த காலத்தில் கட்டப்பட்ட தாஜ்மஹால் இன்றும் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. 1

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுதல் : 4 × 3 = 12**

28. உழவின் மேன்மையை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

*Ans.* :

i) உலகமே உழவின் பின்தான் சுற்றுகிறது. எனவே தான் உழவு முதன்மைத் தொழில் ஆகும். 1

ii) தானும் உண்டு மற்றவருக்கும் உண்ண கொடுத்து உலகினை வாழ வைத்து கொண்டுள்ளது. 1

iii) ஏர் ஓட்டுவதற்கு முன்பு எருவிடுதல் நன்று நீர் பாய்ச்சுதலுக்கு முன்பு பாத்திக்கட்டுதல் மிக நன்று. 1

29. அனுமன் இராமன் பெயரைச் சொன்னதும் சீதை கூறிய மொழிகள் யாவை ?

*Ans.* :

i) சீதை அனுமன் இருவரிடையே நடந்த உரையாடல் : 1

ii) சீதை : என்பால் நீ அருளுடையவன்; நான் இறக்கும் சமயத்தில் 'மை' போன்ற நிறம் பெற்ற இராமனின் பெயரைச் சொல்லி, நான் பெற இருந்த மரணத்தைத் துறக்குமாறு செய்தாய் 1

iii) அனுமன் : நீர் இருந்த இடம் எவ்விடத்தில் உள்ளது என தெரியாதமையால்தான் இங்கு வருவதற்கு தாமதம் ஆனது. நீர் இல்லாது உம் நாயகர் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். 1

30. பூமியில் வெப்பம் அதிகரிக்கும் போது ஏற்படக் கூடிய விளைவுகள் யாவை ?

*Ans.* :

i) பூமியின் வெப்பநிலை அதிகரிக்கும் நிலையில் வடதுருவம், தென்துருவம் இரு திசைகளில் இருக்கக் கூடிய பனிக் கட்டிகள் எல்லாம் உருக ஆரம்பித்துவிடும். 1

ii) கடல் மட்டம் உயரும் பல தீவுகள் மூழ்க வேண்டிய நிலைக்கு ஆளாகிவிடும். 1

iii) 1 மீட்டர் கடல் நீர் மட்டம் உயரும் தருவாயில் வங்கதேசத்திலே 4 முதல் 8 கோடி மக்கள் வாழ இடமில்லாது தவிப்பர். 1

31. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்புவான், அதனால் அவனுக்கு ஏற்படும் பாதிப்புகள் யாவை ?

*Ans.* :

i) உனது 17-வது வயதிலிருந்து 24-ஆம் வயதிற்குள் உனது திசையை நீ தேர்ந்தெடுத்து ஆக வேண்டும். 1

ii) அப்படி இல்லையேல் நீ படும் தோல்விகளே உன்னை 30 வயதிற்கே முதுமைக்குத் தள்ளிவிடும். 1

iii) அந்நிலையில் நீ பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர வேண்டியிருக்கும். 1

**VI. குறிப்பு வரைதல் :** **2 × 3 = 6**

32. சிறு பஞ்ச மூலம்

*Ans.* :

சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், சிறு வழுதுணை வேர், நெருஞ்சி வேர், கண்டங்கத்திரி வேர் என ஐந்து சிறிய வேர்களால் ஆன மருந்து பொருள் உடல் நோயினை நீக்கும். 1 + 1

அதுபோல் காரியாசன் இயற்றிய இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து கருத்துக்கள் படிப்போரின் மனதில் உள்ள தீய எண்ணங்களை நீக்கிவிடும். 1

33. பாவேந்தர் பாரதிதாசன்

*Ans.* :

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | கனகசுப்புரத்தினம் |
| பெற்றோர் | - | கனகசபை, இலட்சுமி அம்மாள் |
| பணி | - | தமிழாசிரியர், கவிஞர் |
| படைப்பு | - | குடும்ப விளக்கு, இருண்ட வீடு, பாண்டியன் பரிசு |

**VII. கீழ்வரும் அணியைச் சான்றுடன் விளக்குதல் : 1 × 3 = 3**

34. வேற்றுப் பொருள் வைப்பணி

*Ans.* :

இலக்கணம் : பொதுப் பொருளின் மூலம் சிறப்புப் பொருளை விளக்குவது. 1

(எ.கா) : உரைமுடிவுகாணான் இளமையோன் என்ற நரைமுடித்து மக்கள் உவப்ப - நரை முடித்தும்.

சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை

கல்லாமல் பாகம் படும். 1

விளக்கம் : இளமையோனான கரிகாலன் சரியான தீர்ப்பை வழங்கமாட்டான் என கருதிய முதுமையான மக்களை நம்பும் படி செய்து, நரைமுடித்து வந்து, நல்ல தீர்ப்பை வழங்க செய்தான். சோழன் என்ற சிறப்புப் பொருள் பிறப்பிலேயே பரம்பரைத் தொழிலின் திறம் கலந்திருக்கும் எனும் பொதுப் பொருளையும் உணர்த்துகிறது. எனவே இது 'வேற்றுப் பொருள் வைப்பணி' ஆகும். 1

**VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குதல் : 3 × 3 = 9**

35. ''ஆதியே நடுவே அந்தமே''

*Ans.* :

இடம் : இவ்வாக்கியம் மாணிக்கவாசகர் இயற்றிய 'திருவாசகம்' என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. 1

விளக்கம் : இறைவன் நம் வாழ்வின் முதலாகவும், இடையாகவும் இறுதியாகவும் விளங்குகின்றான். 2

36. ''ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே''

*Ans.* :

இடம் : இவ்வாக்கியம் பொன்முடியார் இயற்றிய புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. 1

விளக்கம் : நல் ஆரோக்கியத்துடன் குழந்தையைப் பெற்றுப் பேணி காப்பது அன்னையின் கடமையாகும். 2

37. எம் தமிழ்ப் பாவையைச் சுமந்து செல்லுங்கள்.

*Ans.* :

இடம் : இவ்வரி கண்ணகி கோயில் செய்த சேரன் செங்குட்டுவன் என்ற உரைநடையில் வந்துள்ளது. 1

விளக்கம் : கனகன், விசயன் இரு வடவரசர்களின் தலைமேல் கல்லைச் சுமக்க செய்தான் சேரன் செங்குட்டுவன். 2

**IX. கீழ்வரும் பழமொழியை விளக்குதல் : 1 × 3 = 3**

38. ''ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்''.

*அல்லது*

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்''.

*Ans.* :

விண்ணில் இயங்கும் கதிரவனை

நம் உள்ளங்கைகளால் மறைத்தலாகுமோ ?

நதி மேல் பாசி படர்ந்தாலும்

நதிமேல் முழுவதும் படர்ந்து மூட இயலுமா ? 1

அது போல பரந்த அறிவாற்றல் உடைய உயர் சான்றோர்களின் மீது எத்தகைய பழிபாவங்களைப் போட்டாலும் கூட அவருடைய புகழ் என்றைக்கும் மங்காது. 2

அல்லது

*Ans.* :

மனிதனின் உள்ளத்தைக் காட்டக் கூடிய கண்ணாடி அவனது முகமே ஆகும். 1

மனம் வாடினாலும் மகிழ்ந்தாலும் சோர்ந்தாலும் இரங்கினாலும் பயந்தாலும் கோபப்பட்டாலும் பகைத்தாலும் எத்தகைய உணர்வை உள்ளடக்கியவனாக காணப்பட்டாலும், அவனது முகமானது ஒரே வினாடியில் காட்டிக் கொடுத்துவிடும்.

''உள்ளங்கை நெல்லிக்கனி போல'' 2

**X. அடிபிறழாமல் எழுதுதல் :** **1 × 4 = 4**

39. ''இனிமைத் தமிழ்'' எனத் தொடங்கும் பாடல்.

*அல்லது*

''இம்பர்வான்'' எனத் தொடங்கும் பாடல்.

*Ans.* :

இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்
கின்பந் தரும்படி வாய்த்த நல் அமுது 1
கனியைப் பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு 1
தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை 1
நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்கும் தமிழ்மீதில் 1

- பாவேந்தர் பாரதிதாசன்

அல்லது

*Ans.* :

தனிப்பாடல்

இம்பர்வான் எல்லை இராமனையே பாடி
என் கொணர்ந்தாய் பாணா நீ ! என்றால் பாணி 1
வம்பதாம் களபம் என்றேன் பூசும் என்றாள்
மாதங்கம் என்றேன் யாம் வாழ்ந்தேம் என்றாள் 1
பம்புசீர் வேழம் என்றேன், தின்னும் என்றாள்
பகடு என்றேன் உழும் என்றாள் பழனம் தன்னைக் 1
கம்பமா என்றேன் நற்களியாம் என்றால்
கைம்மா என்றேன் சும்மா கலங்கினாளே ! 1

- அந்தகக்கவி வீரராகவர்

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருதல் :** **2 × 4 = 8**

40. இலட்சியம் பற்றி வைரமுத்து கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

*Ans. :*

i) ஒரு துறையில் வேலைப் பார்க்க போராடுவது இலட்சியமல்ல. 1

ii) ஒரு துறையையே உருவாக்கி புதுமைகளைப் புகுத்துதல் இலட்சியம் ஆகும். சுவற்றில் மாட்டப்பட்ட சட்டைப் போல உன் இலட்சியம் உள்ளீடற்று இருந்தால் வீண்தான். 1

iii) கழுதையின் முன் காட்டப்படும் கேரட்டைப் போல் உன் இலட்சியம் இருத்தல் வேண்டும். 1

iv) உனது இலட்சியம் உன் அருகாமையிலே இருக்கலாம், ஒரு கிலோ மீட்டர் தூரம் கூட இருக்கலாம் உனது திசை எதுவென்று முதலில் கண்டறி. 1

41. பேராசிரியர் சேதுப்பிள்ளையின் உரையாடலைப் பற்றி குறிப்பு வரைக.

*அல்லது*

என் மக்கள் என்ற கவிதையின் முழுமையான கருத்தினைத் தொகுத்து எழுதுக.

*Ans. :*

i) பேச்சில் இனிமையும், கருத்து நலம் கெழுமியும் காணப்படும். 1

ii) இவர் பேச்சினை ஐந்து நிமிடம் கேட்டாலும் ஐந்து நாட்களுக்கு நினைத்து நினைத்து மகிழுமாறு இருக்குமாம். 1

iii) இவர் பேச்சில் திளைத்த மக்கள் தேனுண்ட வண்டென மதிமயங்கி கிடப்பர். 1

iv) எடுத்துக்காட்டாக பெருந்தகயைர் இருபொருள் பட கூறியது தாகம் உடையோர், வயதில் மூத்தோர் மிகவும் அருமையாகும். 1

அல்லது

*Ans.* :

என் மக்கள் கவிதையின் தொகுப்பு :

பசியால் மடிந்தோர் படிக்கல் சுமந்தோர் 1

கைகால் பிடிப்போர் கைக்கட்டிக் கொள்வோர்

அடிமையிலும் அடிமையப்பா என் மக்களே ! 1

பொன்னை எடுத்தும் அன்னத்தைக் காணாதார்

ஆடையை நெய்தும் வெற்றுடம்பாய் போவார் 1

மாடங்களைக் கட்டியோர் மாளிகை எடுத்தோர்

நாதியற்று வீதியில் வீழ்ந்து கிடப்போரும் என் மக்களே 1

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுதல் 1 × 4 = 4**

42. ''இளமைப் பருவத்து கல்லாமை குற்றம்

வளம் இலாப் போழ்தத்து வள்ளண்மை குற்றம்

கிளைஞர் இல்போழ்தில் சினம் குற்றம்

குற்றம் தமரல்லார் கையகத்தூண்''.

*அல்லது*

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்

எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்

இளைப்பாறில்லை காணென்று கும்மியடி''.

*Ans.* :

i) குழந்தைப் பருவத்திலேயே கற்க வேண்டிய அனைத்தையும் பிழையின்றி கற்றல் வேண்டும். 1

ii) நாம் வறுமையில் வாடும் நிலையில் தானமும் தருமமும் செய்ய நினைத்தல் கூடாது. 1

iii) நம்முடன் உறவினரோ, நண்பர்களோ இல்லாத நேரத்தில் யாருடனும் சினம் கொள்ளுதல் கூடாது. 1

iv) அறிமுகமில்லார் கொடுக்கும் உணவினை உண்ணக்கூடாது. 1

அல்லது

*Ans.* :

i) மண்ணில் பல புதுமைகளைப் புகுத்தி பல பட்டங்களையும் பல சட்டங்களையும் உருவாக்கவே பெண்கள் தோன்றியுள்ளனர். 1

ii) ஆணுக்கு நிகரான அனைத்து துறைகளிலும் சரிசமமாகவே திகழ்ந்து விளங்கி வருகின்றனர் பெண்கள். 1

iii) எனவே பெண்ணானவள். 1

iv) உடல் வலிமையிலோ மனவலிமையிலோ ஆணைவிட குறைவானவள் அல்லள். 1

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக : $1 \times 4 = 4$ ($2 \times 2 = 4$)**

43. கன்னடத்து முதற் கவிஞர் பம்பன். முதன் முதல் இலக்கியமான ஆதிப்புராணத்தைப் பாடி கன்னட இலக்கிய வரலாற்றைத் தொடங்கி வைத்திருப்பதால் ஆதிக்கவி என்னும் பெருமையைப் பெறுகின்றார். ஆகவே இவரது காலம் 10 முதல் 12 ஆம் நூற்றாண்டு வரையிலான காலக் கட்டத்தைப் 'பம்பன் காலம்'' என்று அழைப்பது வழக்கம்.

இவரது காலம் பொற்காலம், வீரகாலம், ஷாத்ர காலம், சமணர் காலம், உரைநடைக் காலம் எனவும் வழங்கப்படுகிறது.

இவருடன் இக்காலத்தில் வாழ்ந்த ஒன்னன், ரன்னன் ஆகியோரையும் சேர்த்து கன்னடத்து மும்மணிகள் என்று பெருமையுடன் அழைப்பதும் உண்டு.

இம்மூவரும் முதல் நூலை அடி நூலாகவும் மற்றதைப் பொருள், நூலாகவும் படைத்திருப்பது சிறப்பாகும்.

வினாக்கள் :

a) பம்பன் வாழ்ந்த காலம் யாது ?

b) கன்னடத்து மும்மணிகள் யாவர் ?

*Ans.* :

a) 10 ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலக் கட்டத்தை ''பம்பன் காலம்'' என போற்றுகிறார்கள். 2

b) ரன்னன், பொன்னன், பம்பன் இம்மூவரும் கன்னட இலக்கிய உலகின் ''மும்மணிகள்'' எனப் போற்றப்படுகின்றார்கள். 2

**XIV. மடல் எழுதுதல் : 1 × 5 = 5**

44. நீ கண்டுகளித்து வந்த சுற்றுலாவைப் பற்றி உன் நண்பனுக்கு மடல் எழுதுக.

*அல்லது*

நீ வசித்து வரும் பகுதியில் சாலைகளைச் சரியாக அமைத்து தர வேண்டி மாநகர ஆணையருக்கு விண்ணப்பம் எழுதுக.

*Ans.* :

தலைப்பு : நண்பனுக்கு கடிதம் 1

தேதி : 1

ஊர் :

ஆருயிர் நண்பனுக்கு :

நலம், 1

இங்ஙனம்

என்றும் அன்புடன் 1

மேல் முகவரி : 1

பெயர் :

க/எண் :

ஊர் :

மாவட்டம்

*அல்லது*

மாநகர ஆணையருக்கு விண்ணப்பம் 1

நாள் : 1

ஊர் :

அனுப்புநர் : 1

பெறுநர் :

மதிப்பிற்குரிய ஐயா, 1

பொருள் :

இப்படிக்கு 1

தேதி : தங்கள் உண்மையுள்ள

ஊர் :

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு, இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுதல் :** **1 × 5 = 5**

45. ''தாய்மொழி வழிக் கல்வி''

*அல்லது*

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''

*Ans.* :

- தாய்மொழிக் கல்வி 1
- முன்னுரை 1

- பொருளுரை 1
- குறுந்தலைப்பு 1
- முடிவுரை 1

*அல்லது*

- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் 1
- முன்னுரை 1
- பொருளுரை 1
- குறுந்தலைப்பு 1
- முடிவுரை 1